IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O.S. No. 119/2016

சாட்சி : PW3

பெயர் : கொண்டம்மாள் தேதி: 25-09-2023

**2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

தாவா சொத்திற்கு அருகில் எனக்கு வேறு சொத்து இல்லை. நான் திப்பம்பட்டியில் அருந்ததியர் காலணியில் குடியிருக்கிறேன் என்றால் ஆமாம். தாவா சொத்தின் விஸ்தீர்ணம் மற்றும் சர்வே நெம்பர் தெரியாது. கொண்டம்மாள் (வாதி) என்னுடைய உறவினர் என்றால் ஆமாம். அவர் கேட்டுக்கொண்டதற்காக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் ஆமாம். நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க எனக்கு சம்மன் ஏதும் வரவில்லை. தாவா சொத்து ஆதியில் பத்துமலை என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் ஆமாம் அவர் 1971ம் வருடம் மலேசியா போய்விட்டார் என்றால் ஆமாம். அப்போது அவருடைய சொத்துக்களை குத்தகைக்கு விட்டுவிட்டு போனார் என்றால் ஆமாம். கொண்டம்மாள் குத்தகை தாரராக உள்ளார் என்று சொன்னால் அவர் அந்த சொத்தை வாங்கி விட்டார். சொத்தை வாங்கிய விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. அந்த கிரய ஆவணங்களில் நான் கையெழுத்து எதுவும் போடவில்லை. பிரதிவாதி, வாதியுடன் தாவா சொத்து சம்மந்தமாக அடிக்கடி பஞ்சாயத்து செய்து கொண்டிருந்தார் என்றால் ஆமாம். பஞ்சாயத்து முச்சலிக்கா ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து எதுவும் போடவில்லை. அந்த பஞ்சாயத்து முச்சலிக்காவில் என்ன எழுதியுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும், வாதி என் உறவினர் என்பதால், வாதி சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/- A.M. ரவி,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.